**ஆண் :** { அடியே கொல்லுதே
அழகோ அள்ளுதே உலகம்
சுருங்குதே இருவாில் அடங்குதே

**ஆண் :** உன்னோடு நடக்கும்
ஒவ்வொரு நொடிக்கும்
அர்த்தங்கள் சேர்ந்திடுதே
என் காலை நேரம் என் மாலை
வானம் நீயின்றி காய்ந்திடுதே } (2)

**ஆண் :** இரவும் பகலும்
உன்முகம் இரையைப்
போலே துரத்துவதும்
ஏனோ முதலும் முடிவும்
நீயென தொிந்த பின்பு
தயங்குவதும் வீணோ

**பெண் :** வாடைக் காற்றினில்
ஒரு நாள் ஒரு வாசம் வந்ததே
உன் நேசம் என்றதே உந்தன்
கண்களில் ஏதோ மின்சாரம்
உள்ளதே என் மீது பாய்ந்ததே

**பெண் :** மழைக்காலத்தில்
சாியும் மண் தரை போலவே
மனமும் உனைக் கண்டதும்
சாியக் கண்டேனே

**ஆண் :** அடியே கொல்லுதே
அழகோ அள்ளுதே உலகம்
சுருங்குதே இருவாில் அடங்குதே

**ஆண் :** உன்னோடு நடக்கும்
ஒவ்வொரு நொடிக்கும்
அர்த்தங்கள் சேர்ந்திடுதே

என் காலை நேரம் என் மாலை
வானம் நீயின்றி காய்ந்திடுதே

**பெண் : ……………………………….**

**ஆண் :** அழகின் சிகரம்
நீயடி கொஞ்சம் அதநால்
தள்ளி நடப்பேனே

**ஆண் :** ஒரு சொல் ஒரு
சொல் சொல்லடி இந்தக்
கணமே உன்னை மணப்பேனே

**பெண் :** சொல்லா வார்த்தையின்
சுகமே மயில் தோகை போலவே
என் மீது ஊருதே எல்லா வானமும்
நீலம் சில நேரம் மாத்திரம்
செந்தூரம் ஆகுதே

**பெண் :** எனக்காகவே வந்தாய்
என் நிழல் போலவே நின்றாய்
உனைத் தோற்று நீ என்னை வென்றாயே

**ஆண் :** அடியே கொல்லுதே
அழகோ அள்ளுதே உலகம்
சுருங்குதே இருவாில் அடங்குதே

**பெண் :** உன்னோடு நடக்கும்
ஒவ்வொரு நொடிக்கும்
அர்த்தங்கள் சேர்ந்திடுதே
என் காலை நேரம் என் மாலை
வானம் நீயின்றி காய்ந்திடுதே

**பெண் : ……………………………….**